317

786

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிற்றஹீம்.



திருப்பாலைக்குடி

பக்கீர் மஸ்தானொலி பேரில்.

அன்பு ததும்பிப் பாடிய

# அலங்காரச்சிந்து.

பாலையம்பட்டி கண்ணன் குலதிலக

பூ. பொயிலா தாஸரவர்கள் இயற்றியது.

நாட்டரசன்கோட்டை,

மீருப்பிள்ளை ருவுத்தர் குமாரர்

மதார்ஸா ருவுத்தர் பொருளுதவி கொண்டு,

பாலையம்பட்டி,

V. A. சுந்தரத்தேவர் அவர்களால்

...வருப்புக்கோட்டை

...ட்டா பிரிண்டிங் பிரஸில்

...திப்பித்தது.

1931 | அணா 2.

:458
N31
186169

பிஸ்மில்லா ஹிற்றஹ்மானிற்றஹீம்.

திருப்பாலைக்குடி,

# பக்கீர்மஸ்தா ஒலி பேரில் அன்பு ததும்பிப் பாடிய அலங்காரச் சிந்து.

காப்பு.

பொன்வளம்சேர் நபுதாலைப் புகழ்பெருகும் நகரமதிற் புனிதராகி
நன்மலர்சேர் திருபாலைக்குடியதனில் நலம்பெருகும்
சின்மயம்சேர் மகம்மதியர் குலத்திற்றோன்றி
கீர்த்திபெறும் பக்கீர்மஸ்தாஒலிகளிரு திருவடியைத்தியானம்செய்வோம்

காவடிச் சிந்து வர்ண மெட்டு.

ஆண்:—சென்னல் விளைவுற்றதிருப்பாலைக் குடி
நன்னகர் மகிமை இதைப்போலே இளம்
நங்கையரே பார்த்தரியாதாலே இன்று
நாமிருபேரு மகிழ்ந்து தாமதமில்லாதுகந்து
செல்வோம் துயர் சொல்வோம்

பெண்:—சிங்காரமாரனே என் தோழா உன்னைத்
தேடிமணந்த மணவாளா நான்
செப்பும் மொழி ஒப்பிடுங்குணாளா அந்தத்
திருப்பாலைக்குடிதனில் விருப்புடன் வந்தவர்யார்
சித்தரோ அல்லது முத்தரோ

ஆண்:—சித்தர் முத்தர் கர்த்தராகும் தினம்
தியானம் புரிந்தால் துயர்போகும் இன்னும்
க்ஷேமலாபங்களுமேலாகும் இந்தத்
திக்கிலுள்ளோர்தான் துதிக்கும் பக்கீர்மஸ்தாஒலியருள்
பெருகும் பாவம் குருகும்

பெண்:—பாவம் கற்றுங் குருநாதன் இந்தப்
பாரினி லவதரித்த நீதன் இளம்
பருவத்தில் ஞானமுற்ற போதன் எங்கும்
பாலைசோலை சூழ்திருப் பாலைக்குடியி லமர்ந்த
ஜோதி நல்ல நீதி

ஆண்:—நீதிசேர்மகாபதியர் குலமே   அவர்
நிறைதிருப் பாலைக்குடித்தலமே   இந்த
நீணிலத்தில் யார்பெருக்கும் நலமே   தர
நிகரில்லா யோகப்யாசம ஜெகமதிலேபுரிந்த
ஸாது   இவரென்   றோது

பெண்:—ஒதுவதென்ன சுகுமாரா   நானும்
உன்னுடனே தான்வருவேன் தீரா   திளம்
உத்தமர் மகிழுமலங்காரா   இப்போ
உடுத்தப்பட்டாடை எனக்கெடுத்துக்கொடுக்கவேணும்
துரையே   சொன்னேன்   முறையே

ஆண்;—பட்டுடனே ஜரிகைசில்க்கு   உலகில்
பக்தியுள்ளமாதர்களுக்கெதற்கு   வேண்டாம்
பனுக்கும் குலுக்கும் மூகமினுக்கும்   இந்தப்
பாரிலிவள்வேசையென்று கூறிடுவார்வேறேயுனக்
கெடுத்துத்   தாரே   னுடுத்து.

பெண்:—வேறேபுடவை பொருந்தாது   எந்தன்
வேந்தரே இம்மொழி சொல்வதேது   சிறு
மெல்லிநான் மனமகிழப்போது   ஒரு
மேகவர்ணச்சேலையின்மேல் தாகமுற்றேனெந்தன்
மனநினைவா   சொந்தக்   கணவா

ஆண்:—சொந்தக்கணவனெந்தன் சொல்லுப்   போலே
தோகையரே ஓர் நிலையில் நில்லு   கெட்ட
சொகுசுப்புடவை வேண்டாம் தள்ளு   முன்னாள்
சொந்தமாய்ப் பாட்டிகட்டின இந்நாட்டில் நெய்தநூலக்
கண்டாங்கி   தாரேன்   வாங்கி

பெண்:—வாங்கிக்கொடுப்பதுடன் மன்னா   ஒரு
மவுஷாரவுக்கைவேண்டு மின்னாள்   மன
வருத்தமுண்டாகுமோ நான் சொன்னால்   மஞ்சள்
மாலைநேரங்குளித்துச் சாலைவழிநடப்போம்
நாதா   மகிழ்   விநோதா

ஆண்:—மஞ்சட்குளித்துமலர் சூட்டி   உந்தன்
மவுஷாரவுக்கைதனைப் பூட்டிச்   சாலை
மார்க்கம் நடந்தாலிந்த நாட்டி   லுள்ள
மாதர்களோடாட வரும் தீதுகூறியே நகைப்பார்
மயிலே   சொர்ணக்   குயிலே

# பக்கீர்மஸ்தாமௌலி அலங்காரச்சிந்து.

பெண்:—சொர்ணமயமாய் விளங்குஞ்ஜோதி முன்செய்
துயரமகற்ற வந்தயோகி நல்ல
சூக்ஷ்ம நெறியறிவிவேகி தனைத்
தொழுது வணங்குவோர்க்குப் பழுதில்லா முத்தி தரு
வாரா சொல்வாய் தீரா

ஆண்:—முத்திகொடுப்பார் மணமிகவே மகிழ்ந்து
முத்தமிட நமக்காண்பெண் மகவே தருவார்
மெல்லியேகேள் பாக்கியங்கள் பெறவே நல்ல
மேலான நன்னூலறிந்த கோலாகலரும் கருணை
யழிப்பார் துய மொழிப்பார்

பெண்:—அப்படியானால்த்தாங்கள் வருதி போலே
ஆசைமன்னு நான்வருவேன் கருதி வேறு
அட்டி இல்லை இல்லை இது யுறுதி அந்த
ஆதாரப் பொருளினிரு பாதாரந்தனைத்துதிப்ப
தெப்படி. சொல் முறைப்படி

ஆண்:—துதிக்கும் விதமதனை நானே இங்கு
சொல்லிவாரேன் கேட்டிடு செந்தேனே அந்தத்
தூய ஜோதிமா மகானைத்தானே நின்று
தோத்திரம்புரியச் செம்பில்த் தீர்த்தமது கொண்டுவந்து
துதிப்பாய் மனக் கதிப்பாய்

பெண்:--மனதிற் தியானமுற்ற பேரும் இந்த
மானிலத்திலுற்றபெரியோரும் கொஞ்சம்
மாசில்லா விஜித்ரக் கவியோரும் தினம்
வந்துகந்து சிந்தைதனிற் சந்தோஷங்கொண்டாடிடுங்
கண்காட்சி கண்டேன் மாட்சி

ஆண்:—காட்சி மிகும் புண்ணியர்கள் கோடி நூறு
காதவழிக்கப்பா லிருந்தோடி சிலர்
கால்நடையதாய் வருவார்கூடி வந்து
கண்டு தெரிசித்தவர்க்கு என்றுங்குறைவில்லாத
சிலாக்யம் பெற்றார் பாக்யம்

பெண்:—பாக்கியமிகுந்த எந்தன் சாமி ஞானம்
பார்த்துத் தெளிந்த சுகவாமி நல்ல
பக்தியுள்ளோர் நேசங்கொள்ளும் நேமி அந்தப்
பக்கீர்மஸ்தான் தன்மகிமை இக்கணமின்னமுஞ்சொல்ல
வேணும் அன்பு காணும்

## சந்தக் கும்மி மெட்டும் மகுடமும்.

ஆண்:—சொல்லுவேன் கேளடி மானே நெறி முறை தவாத
சோலைக்கிளியே நல்லருமை திருப்
பாலைக்குடி மகான் பெருமை தனைச்
சொந்தமுடன் சிந்தை தனிலெந்தனேரமுந் துதித்திட
வந்த பிணி நோய்களறுமே

பெண்:—வந்தபிணி நோய்களுந்தான் பொடிபடும்படி யென்ன
மாயமருந்துண்டோ அங்கே எந்தன்
மன்னவரே நல்ல சங்கை யுள்ள
மதியாம் மகமதியர் குலமணியாமதிபதி யெனுமமகான்
வந்து வளர்ந்த வூரெங்கே

ஆண்:—வந்துவளர்ந்த நகரமது மகிதலப்புகழ்
மாக்ஷிமிகும் நம்புதாளை தனிற்
காக்ஷிபெற வுற்றதாலே நயினர்
மரைக்காரவர் தவத்தா லவதரித்தாரதினிமரிசை யுடன்
நங்கையே கேட்பாயிவ்வேளை

பெண்:—தாளைவாழை சூழும் பாலைநகர தனிலேயவர்
தாஸன் பொயிலான் சொல்ப் பாட்டுப் பாடிச்
சற்குணத்தை நிலைநாட்டு எங்கும்
சந்தக்கும்மி இந்தப்படி விந்தைதரு மெனவரிந்தேனே
சாமியே தாங்கள் சொற்கேட்டு

ஆண்:—வேட்டுடனே மேளதாளம் நாகசுரங்களும்
மெல்லியே அவ்விடத்தேது மற்ற
வேடிக்கைகள் கிடையாது நல்ல
வேதப் பிரபல்யத் திருவான சுய ஜெய ஜோதியை
வேண்டித் துதிப்பா யிப்போது

பெண்:—வேண்டித் துதித்தேனிப் பாண்டித்தலம் நலம்பெரும்படி
வேண்டுமென்றே அந்தச்சாது வந்தார்
மேதினி தன்னிலிப்போது அந்த
வேந்தர் தரும் தீர்த்தம் சந்தோஷமுடன் வைத்திருப்பவர்
யார்க்குமே சொல்லக் கூடாது

ஆண்;—சொல்லக்கூடாதென்று சொன்னயிங் கதையரிந்திடத்
தோகையே வேண்டும் பிரார்த்தம் முற்றோர்க்
காகையாலுண்டுமத் தீர்த்தம் சிறு
செம்பது நிறம்பும்படி யன்பு மிகுந்தவரிடந்தரும்
தேனே யதோபா ரதார்த்தம்

பெண்:—தீர்த்தமருத்துவத்தாலே தீரும் பிணிகளைச்
சேயிழை நானதையறிய இந்தத்
தேசத்தில் யாவேர்க்குந் தெரிய மன்னு
செப்பிடுவீரிப்புவியி லொப்பும்படி மகிழ்வல்லவர்
தென்மாரிபோல்க் கவிசொரிய

ஆண்.—தீரும் கைகால்வலி காய்ச்சல்பெரும் குருமவலிகள்
தேடிவந்த குஷ்டரோகம் மனிதர்
தேகத்திலுள்ள நீர் மேகம் பின்னும்
தேளரவை பூரான்கடியாலே மிகப்பாதவித்தவர்
சென்றுலுடன் தீர்ந்துபோகும்

பெண்:—தேளுடன் கட்டுவக்காலிசெய்யான் விஷமுள்ள
ஜெந்துவண்டுகட்கும் சருக்கா விஷந்
தீர்க்கு மருந்தங்கொன்றிருக்கா அந்தத்
திருப்பாலைக்குடி மஸ்தான் விருப்போடருள் பிரசாதத்தைச்
சீமானைத்தடிவா சருக்கா

ஆண்.—தேடிநடந்து திருப்பாலைக்குடிநகர் வளம்
தேவியே பார்த்திடத்தானே இதோ
செல்லுவோம்வாடி செந்தேனே எங்கும்
திகளும் மகமதியர் குலம்புகழும் பாட்டிசைதவறாமற்
செப்புவேன் கேட்பா யென்மானே

---

## தங்கரத்தின (மெட்டு)

ஆண்:—செப்புவேன் கேளடி நீ தேனேவிகஜிதமே
இப்புவியில் பக்கீர்மஸ்தான் இல்லறஞானியல்ல அவர்
இன்பமுடனல்லாவாலிகபர மானதல்லோ

பெண்:—செல்வமுடன் வாழ்ந்துவரும் சீர்த்திசேர்மகமதியர்
சொல்லுருதி யுள்ளவரா என் சுவாமிசிங்காரா
அவர்கள் தொழுகும் தெய்வமல்லாதானு சுகுணலங்காரா

ஆண்:—அல்லா அவர்களுக்கு ஆதாவுதானிருக்கப்
பொல்லாப் பிணிகளெல்லாம் பூவையே சிங்காரி
பின்னும் சொல்லாமலோடுமென்று துதித்திடுவாய்கோரி

186169

பெண்:—சொல்லாமலே பிணிகள் தொலைந்தோடுமென்றீர்
அல்லாதனைத் துதித்து என் ஆசைச் சிங்கா
இங்கு அருளடைந்தாருமுண்டோ அழகுள்ளமாரா

ஆண்:—அருளடைந்த ஞானிகளை ஆணங்கே சொல்லுறேன்
பொருளாயறிந்திடுவாய் பூவையரே கிளியே இந்த
பூதலத்திற் பக்கீர்மஸ்தான் புண்ணிய செள்ந்தரி

பெண்:—அறிந்தேனவர்மகிமை ஆசையுள்ள நேசமன்னா
சொரிந்தே தேன் கசிந்துருகிடும் சோலைசூழும்நலமே
பெறஅறிந்தோர் துதிக்கும்திருப் பாலைக்குடித்தலமே

ஆண்:—திருப்பாலைநன்னகரம் சித்திமுத்தி பெற்றதிரம்
விருப்போடுதான் துதித்தால் மெல்லியேசிங்காரி
தொல்லைவினைதீர்க்கும் நல்லவரம் வேண்டிடுவாய்கோரி

பெண்:—வேண்டிவரும் மாந்தருக்கும் மேதினியில்யாபேருக்கும்
ஆண்டியோகி சங்கமற்கும் ஆதாரமானபிதா
மஸ்தான் ஆனந்தத்தைத்தானுரைத்திடும் அன்பரேநீர்தான்சதா

ஆண்:—சதா அருந்தவத்தோர் தருமநெறியில்த் திறத்தோர்
மதாருஸாகிபுக்கேன் மணிச்சட்டமணியே வந்த
மாயப்பிணிதீர்க்காதொரு வஞ்சகமேதினியே

பெண்:—மதாருஸாகியென்று மன்னவரேசொல்லவந்தீர்
அதாரவரு ரேது ஆசைக்கண்ணாளா எனக்கு
அதன்விபரம் விளங்கும்படி நீரறைவாய் குணாளா

ஆண்:—அதுவிபரம் நாட்டரசன் ஆண்டுவரும் கோட்டையிலே
புதுவலைவிற் தானிருக்கார் பூங்கொடியேமயிலே
அவர்பிணியகற்ற மருந்தில்லாது போற்றுகிறாரேயிலே

பெண்:—மருந்தேது ஜோஷியர்கள் வைத்தியர்களிங்கேயேது
விருந்தழைக்கும் பக்கீர்மஸ்தான் விஞ்சை நிரஞ்சனமே அவர்
வீடுதேடிப்போனார்ப் பிணிவிரைவிலகன்றிடுமே

ஆண்:—விஞ்சையறிந்தவராம் அவர் மேனாட்டு வைத்தியராம்
பஞ்சைகளைக்காக்கும்மகான் பாதம்பணிந்திடுவோம்
இந்தப்பாரில் மதார்ஸாகிபையும் கூட்டிநடந்திடுவோம்

பெண்:—கூட்டிநடந்திடுவோம் கொற்றவரே யென் கணவா
பூட்டியதோர் தங்கநகைகளைப் பூமலரே மணமே
வைத்துப்பொருளதிகம் வாங்கவேண்டும் பூர்த்தியோடிங்கனமே

ஆண்:—பூர்த்திமனதுடையோர் புண்ணியருறவுடையோர்
பார்த்திபர்போல் மதார்ஸாகிபு பாவலர் தானுருந்து
பொருள்பணத்துக்கென்ன பஞ்சமுண்டோ பாவையரேயிருந்து

பெண்:—பொருளுதவி செய்யுமந்தப் புண்ணியரைத் தானழைத்து
அருள்கொடுக்கும் ஆண்டவர் தன் னாலயம் தேடிடுவோம்
பின்னும்துருவானமோட்டாருக்கு டிக்கட் வாங்கிடுவோம்

ஆண்:—மோட்டாரனைகயடி தெட்டமுடனேறிடடி
நாட்டார்ககரத்தாரும் நாகரீகக்குயிலே
அங்கு நலம்பெறவே கூடிவாரார் நானுரைத்தேன்மயிலே

பெண்:—நகரமதிற்சிறந்த நாட்டரசன் கோட்டையில்வாழ்
அகங்குளிரும் மதார்ஸாகிபுக் கன்புகிடைத்திடுமா
பிணி அகன்றுநன்று இன்றேடுநோய் துன்பந்துலைந்திடுமா

ஆண்.—இன்றுடனே தானவர்க்கு ஏற்பட்ட வியாதியெல்லாம்
சென்றுவிடு மச்சமில்லே என் தித்திக்கும் செங்கரும்பே
அவர் திடகார்த்தமாவாரடி என் பிச்சிமலரரும்பே

பெண்:—பிச்சிமலரரும்பே பேரின்பத்தின் சாகரமே
உச்சிதக்கட்டாணிமுத்தே என் உத்தமரேகணவ
நாமள் உகந்தங்கு நீராடப்பொய்கை உண்டுமோசொல்லினிவாய

ஆண்:—நீராடப் பொய்கையுண்டும் நீலக்கருங்குயிலே
போராடவேண்டாமடி என் பூவையரே கதிப்பாய்
யாந்தர் போயிறங்கிப்பொய்கையில்மனப்பூர்த்தியுடன்குளிப்பார்

பெண்:— போராடவந்தேனென்று கூறுதீரென்கணவா
மாராத்துயரங்கொண்டு மன்னவரே துரையே
பெண்கள் மலடாகி நிற்பதென்ன மர்மமேதோ தெரியேன்

ஆண்:—மர்மமதுஇன்னதென்று மாதரசே நானறியேன்
தர்மமுள்ள பக்கீர்மஸ்தான் தந்த கனித்திரத்தால்
கர்ப்பம் தான்ஜெனித்ததென்று சிலர் தாஷ்டீகமோடுரைத்தார்

பெண்:—திரத்தில் மிகுந்தகனி தேசமதிலெந்தக்கனி
வரத்தில் மிகுந்தஎந்தன் மன்னவரே துரையே
அதின் வகைவிபரமின்னதென்று வழங்கிடுவாய் நிறையே

ஆண்.—எந்தக்கனியெனவே ஏந்திழையே கேட்கவந்தாய்
சொந்தமகான் தந்தகனி துலங்கிலுமிச்சங்கனி
தீர்த்தத் தோடதனைத்தான்புசிக்கச் சுதன் பெருவார்களே

பெண்:—சுதருடன் பாக்கியங்கள் துலங்குந்திருப்பாலநகர்
அதன்மகிமை தன்னைப்பாட ஆசைச்சிங்க
அங்கு யாரைக்கூடக்கூட்டிச்செல்வோம் அழகுள்ள

ஆண்:—கூட்டி நடப்பவனர்க் கோமளமே சொல்லுகிறேன்
பாட்டிற்சிறந்தபயில்வான் பாவலர் சுந்த
இந்த நாட்டிலெங்கும் கியாதிபெற்ற தாலவர்சொல்த்திறட

பெண்:—சொல்த்தீசமுள்ளவரும் ஆலங்குக்கவிவல்லவரும்
எள்ப்பிரமாணமெனும் என்னருமைக் கணவா
குற்றம் எடுப்பதுண்டோ அவரிடத்தி லியப்பிடுவீர்நீவா

ஆண்:—இயம்புவேன் கேளடிநீ எந்திழையேயபெண்மயிலே
ஜெயம்பெற்ற இந்திரன்குலத் திலகநவமணியாம்
ஞானம் தெரிந்தறிந்தோர் தான்புகழுமெய் சுந்தரநன்மணியாம்

பெண்:—நன்மணி யோசையைப்போல் நாடெங்குமே தொனிக்கும்
கண்மணிசுந்தரத்தேவனைக் காதலமேகூடக்
கூட்டிக் காக்ஷிபெறச்செல்வோம் சிந்து கவிகளிசைபாட

ஆண்:—பாட்டில்ச் சிறந்தசுந்தரம் பாலகன்சொல் வாக்கியத்தை
காட்டில் வாழ்வண்டினங்களும் கண்டு ரீங்காரம்பாடும்
பின்னும் கானமயில் காவில் மகிழ் கொண்டங் கேனகங்கூடும்

பெண்:—வண்டுரீங்காரமது வனத்துக்குள்த்தான்தொனிக்கும்
குண்டுபீரங்கியாகை கொண்ட தோட்டாடுடையா
சுந்தரம்சூரற்றுனியின்மகிமைசொல்வீர்குர்பிட்டேடுனடியாள்

ஆண்:—அடியார்க்கடியவண்டி அழகு குழல் வாய்த்தவண்டி
தடியடி தன்மனத்தோர் தங்கக்களஞ்சியமே
அவர் தன்மைகண்டால் நேசமாவார் தானிது நிஜயமே

பெண்:—நேசவிசுவாசருக்கும் நீனிலத்தில் யாபேருக்கும்
தாசன்பொயிலான்தமிழ் சந்தக்குயிலொனிக்கும்
இந்தத் தாலமீதில் யாபேருக்கும் சர்க்கரைபோலினிக்கும்

ஆண்:—சர்க்கரைப்பந்தலிலே தனித்தேனும் சார்ந்ததுபோல்
மிக்கபுகழ் சுந்தரம்சொல் குர லோசை பரிமளிக்கும்
இந்த மேதினியில் யாபேருக்கும் மேன்மையது ஜெனிக்கும்

பெண்:—மேன்மையதுவிளங்கும் வேதாந்தமுந்துலங்கும்
நான்மறை ஞானதியான நாதர்மகிழ் வாழி
பாடி நலம்பெறவே சொல்வோம் எந்தன் நாதரேயின்னுஷேல்

ஆண்:—வாழிவாழிவாழியடி மகான்சித்தர் தான்வாழி
வேள்விசெய்யும் பக்கீர்மஸ்த்தான் மிக்கபுழ்வாழி
எங்கும் விளங்கும்மகமதியர்குலம் துலங்கிடவேவாழி

ண்:—மதுவிற்சிறந்தநல்லூர் மாக்ஷிசே ரருப்புக்கோட்டை
நீதிசேர் பிரிண்டிங்பிரஸ் நேசர்களும் வாழி
பலகம்போஸ் நிபுணரெனும் சினிப்பாண்டியன் [illegible]மகிழ்வாழி

சுபம்! சுபம்!! சுபம்!!!